முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1562

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**08.01.2024**, திங்கட்கிழமை

1. தர்மத்தின் காவலனே அரங்கா
தவபலமிக்க ஞான தேசிகா
கர்மத்தை போக்கி உலகோர்க்கு
கலியுகத்தில் அழியாமை தர வந்த குருராஜா
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமண்யர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
வரங்களாக மக்களிடை தீட்சைவழி அருளி
வையகத்தில் அவர்களும் ஞானிகளாக
3. ஆகவே அற்புதத்தை நடத்துகின்ற
அவதார ஞான தேசிகனே உந்தனுக்கு
உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
உலகத்தில் சக்தி கூட ஞான அறிவுரை ஆசி

(சோபகிருது வருடம் மார்கழி மாதம் 23 ம் நாள், 08.01.2024, திங்கட்கிழமை)

4. சிந்தைபட தொடர்ந்து வழங்கிடுவேன்
செப்பிட அரங்கனுக்கு நித்தம் நித்தம்
ஆற்றல் கூட்டி ஆறுமுகன் யான்
அற்புதமாக பிரம்ம வேளையில் மகா சக்திகள் வழங்கி வருகின்றேன்
5. வருகவே அரங்கன் உண்ணும் அமுது
அனைத்து வகையும் ஆற்றலாக அருள்புரிகின்றேன்
வரமென அரங்கனின் நாமஜெபம்
வையகத்தில் எங்கு எப்பொழுதெல்லாம் முழங்கி வருகின்றதோ
6. அங்கு அப்பொழுதெல்லாம் ஆறுமுகன் யான்
ஆற்றலாக வெளிப் பட்டு
அற்புதம் நடத்துகின்றேன்
சூட்சுமம்பட அரங்கமகான் நாமஜெபம்

7. சுத்த நெறியோடு அன்னதானத்தை
கையில் எடுத்து செய்பவர்கள்
அனைவருக்கும் ஆறுமுகன் என்
காட்சி உண்டு உண்டு

8. உண்டான தர்ம வேத
உயர்வான சுத்த சைவ நெறி
சித்திமிகு ஞானிகள் பூஜை
சிறப்பு தருகின்ற அரங்கனின் நேர்பார்வை

9. பார்வை கொண்டு வாராந்திர வழிபாடு
பழுதின்றி அரங்கன் திருவடி பற்றி
சரணாகதி கொண்ட யாவர்க்கும்
இந்த பிறவியில் பிறவாப்பேறு உறுதி உறுதி

ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—